# தூய கன்னி மரியாவின் அமலோற்பவம் பெருவிழா - டிசம்பர் 08

## திருப்பலி முன்னுரை

விண்ணக கதவுகளைத் திறந்து மண்ணக உயிர்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கும் இறையன்பை அனுபவித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் தூய கன்னி மரியாவின் அமலோற்பவ பெருவிழாவிற்கு வருகை தந்திருக்கும் அனைவரையும் பெருவிழா வாழ்த்துக்களைக் கூறி வருக! வருக! என இறை இயேசுவின் நாமத்தில் வரவேற்கிறோம்.

கண்கள் பனிக்கும் போதெல்லாம்

உள்ளம் தேடும் உன்னத உறவு அம்மா.

கண்கள் இல்லாமல் இரசித்தேன்

காற்று இல்லாமல் சுவாசித்தேன்

வார்த்தை இல்லாமல் பேசினேன்

பொம்மை இல்லாமல் விளையாடினேன்

கவலை இல்லாமல் வாழ்ந்தேன் - என்

தாயின் கருவறையில் மட்டுமே.

இவை இவ்வுலகிற்கு நம்மை வெளிப்படுத்திய அன்னையை உருவகப்படுத்தும் கவிதைகள். அதனால்தான் நம் இறைவனையே கருவில் தாங்கிய நம் தேவ தாயின் அமல உற்பவப் பெருவிழாவைக் கொண்டாடுகிறோம்.

“அருள் நிறைந்த மரியே வாழ்க!” என்று கபிரியேல் அதிதூதர் மங்கள வார்த்தை சொன்னதில் இருந்து, தனது மகனை உயிரற்ற உடலாய் மடி சுமந்த வேளை வரை எவ்வித எதிர்ப்பும், முறுமுறுப்பும் காட்டாமல், “நான் ஆண்டவரின் அடிமை” என்று தன்னிலை மாறாமல் உன்னதத்தின் மேன்மையையும் வெளிப்படுத்தினார் நம் அன்னை.

இன்றைய வாசகங்களும் இதையே கூறுகிறது: தொடக்கநூல், பெண் எவ்வாறு வஞ்சிக்கப்பட்டாள்? பாவம் எவ்வாறு உலகில் நுழைந்தது? என்பதையும் கூறுகிறது. இரண்டாம் வாசகமும், பாவத்திலிருந்து விலகி நாம் தூயோராகவும், மாசற்றோராகவும் கிறிஸ்து வழியாக நாம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளோம். பாவ இரத்தத்தில் உதித்த நாம் மாசற்றோராக மாற பரம தந்தை தேர்ந்தெடுத்த உன்னத பாத்திரம் தான் தூய கன்னி மரியாள். அகிலத்தையே ஏழு நாட்களில் படைத்த பரமனுக்கு தன் மைந்தனை மிகப்பெரிய அரசனாக இவ்வுலகில் உருவாக்கியிருக்கலாம். ஆனால் பாம்பினால் வஞ்சிக்கப்பட்டு பாவத்தை தாங்கிய அந்த பெண்மையைப் புனிதமாக்க பரம தந்தையால் சுட்டிக் காட்டப்பட்டு, மைந்தனால், “இதோ உன் தாய்” என்று இவ்வுலகிற்கு அருளப்பட்ட அன்பின் வரப்பிரசாதம் தான் நம் அன்னை.

ஆனால் நடைமுறையில் நாம்?

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்

நற்றனவாயினும் நனி சிறந்தனவே

என்றான் பாரதி.

ஆனால் இன்று?

பெற்ற தாய் முதியோர் இல்லத்தில், பிறந்த நாடு கயவர்களிடத்தில்.

நாமும், நாடும் செல்வது உகந்த பாதையா? நான் பிரகாசிக்க, தன்னையே எரித்துக் கொண்டு இருக்கும் திரியானவள் தான் என் தாய் என்ற மனநிலையைக் கொள்வோம்.

போற்றித்தாய் என்று தாளங்கள் கொட்டடா!

போற்றித் தாய் என்று பொற்குழலூதடா!

என்ற பாரதி வாக்கிற்கிணங்க அகந்தையை அகற்றுவோம். அன்னையைப் போற்றுவோம். அருளைப் பெறுவோம். இத்திருப்பலியில் இணைவோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; +91 843 802 1938; www.arulvakku.com